செ.வெ.எண்: 15/2020 நாள்: 16.11.2020

# திருப்பூர் மாவட்டம்

## வரைவு வாக்காளர் பட்டியலை அங்கீகிகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள் முன்னிலையில், மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.க.விஜயகார்த்திகேயன் இ.ஆ.ப., அவர்கள் வெளியிட்டார்.

திருப்பூர் மாவட்ட ஆட்சியரக அலுவலக கூட்டரங்கில், இன்று (16.11.2020) வரைவு வாக்காளர் பட்டியலை அங்கீகிகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள் முன்னிலையில், மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.க.விஜயகார்த்திகேயன் இ.ஆ.ப., அவர்கள் வெளியிட்டார்.

01.01.2021 -நாளினை தகுதி ஏற்படுத்தும் நாளாகக் கொண்டு வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்க முறை திருத்தம் - 2021 மேற்கொள்ள இந்திய தேர்தல் ஆணையத்தால் வெளியிடப்பட்ட கால அட்டவணைப்படி **இன்று (16.11.2020)** திருப்பூர் மாவட்டத்திலுள்ள திருப்பூர் வடக்கு, திருப்பூர் தெற்கு, அவிநாசி(தனி), பல்லடம், காங்கயம், தாராபுரம்(தனி), உடுமலைப்பேட்டை மற்றும் மடத்துக்குளம் ஆகிய எட்டு (8) சட்டமன்றத் தொகுதிகளுக்குரிய வரைவு வாக்காளர் பட்டியல்கள் திருப்பூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய மற்றும் மாநில அரசியல் கட்சியினர் முன்னிலையில் வெளியிடப்பட்டது. அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியினருக்கு வரைவு வாக்காளர் பட்டியல் நகல்கள் மற்றும் குறுந்தகடுகள் (CD) வழங்கப்பட்டது.

**திருப்பூர் மாவட்டம்**

**16.11.2020 அன்று வெளியிடப்பட்ட வரைவு வாக்காளர் பட்டியலின்படி வாக்காளர் எண்ணிக்கை**

| எண் மற்றும் சட்டமன்றத் தொகுதி | | வாக்கு சாவடிகளின் எண்ணிக்கை | ஆண் | பெண் | மூன்றாம் பாலினத்தவர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 101 | தாராபுரம் (தனி) | 298 | 125773 | 130946 | 10 | **256729** |
| 102 | காங்கயம் | 294 | 123963 | 129885 | 22 | **253870** |
| 112 | அவினாசி (தனி) | 312 | 133498 | 139805 | 1 | **273304** |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 113 | திருப்பூர் (வடக்கு) | 362 | 187029 | 179417 | 97 | **366543** |
| 114 | திருப்பூர் (தெற்கு) | 240 | 135830 | 132052 | 30 | **267912** |
| 115 | பல்லடம் | 407 | 187926 | 187852 | 60 | **375838** |
| 125 | உடுமலைப்பேட்டை | 293 | 128421 | 136784 | 23 | **265228** |
| 126 | மடத்துக்குளம் | 287 | 120335 | 124068 | 15 | **244418** |
| | **மொத்தம்** | **2493** | **1142775** | **1160809** | **258** | **2303842** |

14.02.2020 முதல் 31.10.2020 வரை மேற்கொள்ளப்பட்ட தொடர் திருத்தத்தின் போது வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்கல், மற்றும் இதர விபரங்களில் திருத்தம் மேற்கொள்வதற்காக பெறப்பட்ட **22744** கோரிக்கைகளின் பேரில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரைவு வாக்காளர் பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ளது. மேலும் கீழ்க்கண்ட கால அட்டவணைப்படி வாக்காளர் பட்டியல் சுருக்க முறைத் திருத்தம் நடைபெற உள்ளது.

**கால அட்டவணை**

| வ. எண் | மேற்கொள்ளும் பணி | நாள் |
|---|---|---|
| 1 | வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடுதல் | 16.11.2020 |
| 2 | பெயர் சேர்த்தல்/நீக்கல்/திருத்தலுக்கான மனுக்கள் அளிக்க கால அவகாசம் | 16.11.2020 முதல் 15.12.2020 வரை |
| 3 | சிறப்பு முகாம்கள் (நான்கு விடுமுறை நாட்கள்) | 21.11.2020 , 22.11.2020 12.12.2020 & 13.12.2020 |
| 4 | இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடுதல் | 20.01.2021 |

வரைவு வாக்காளர் பட்டியல்கள் அனைத்து சட்டமன்றத் தொகுதி வாக்காளர் பதிவு அலுவலர்கள் மற்றும் உதவி வாக்காளர் பதிவு அலுவலர்களின் அலுவலகங்களான திருப்பூர் மாநகராட்சி அலுவலகம், சார் ஆட்சியர் / வருவாய் கோட்டாட்சியர் அலுவலகங்கள், வட்டாட்சியர் அலுவலகங்கள், மாநகராட்சி மண்டல அலுவலகங்கள் மற்றும் வாக்குச்சாவடி மையங்கள் ஆகியவற்றில் பொதுமக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டிருக்கும். பொதுமக்கள் வரைவு வாக்காளர் பட்டியலை சரிபார்த்து தங்கள் பெயர் வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றிருப்பதை உறுதி செய்து கொள்ளலாம்.

வாக்காளர் பட்டியலில் புதிதாக பெயர் சேர்க்க விரும்புவர்கள், இடம் பெறாதவர்கள், வாக்காளர் பட்டியலில் உள்ள பதிவுகளில் திருத்தம் செய்ய விரும்புவோர், பெயர் நீக்கம் செய்ய விரும்புவோர் மற்றும் ஒரே தொகுதிக்குள் குடியிருப்பு மாறியவர்கள், முகவரி மாற்றம் செய்வது போன்ற கோரிக்கைகள் தொடர்பாக, **16.11.2020 முதல் 15.12.2020 வரை** உரிய படிவங்களில் வாக்குச்சாவடி மையங்களில் விண்ணப்பிக்கலாம் என்றும், **21.11.2020, 22.11.2020, 12.12.2020 மற்றும் 13.12.2020** ஆகிய விடுமுறை தினங்களில் நடைபெற உள்ள சிறப்பு முகாம்களில் விண்ணப்பிக்கலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது. இந்த வாய்ப்பினை பயன்படுத்திக் கொண்டு **01.01.2021-ம் தேதியில்** 18 வயது பூர்த்தியானவர்கள் தங்களது பெயர்களை வாக்காளர் பட்டியலில் சேர்த்துக் கொள்ளலாம் என திருப்பூர் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் ஆட்சித் தலைவர் **டாக்டர். க. விஜயகார்திகேயன், இ.ஆ.ப.,** தெரிவித்துள்ளார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.கு.சரவணமூர்த்தி, திருப்பூர் வருவாய் கோட்டாட்சியர் திரு.ஜெகநாதன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.சாகுல் ஹமீது, தேர்தல் வட்டாட்சியர் திரு.ரவீந்திரன், அரசு அலுவலர்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம்.**